# வடக்கு மாகாண தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2017(III)

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - 1(அ) தரப் பதவிக்கு **இணைப்பு - 01** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இணைப்பு - 02** இல் காட்டப்பட்டவாறு குறித்த பதவிகளுக்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **04.08.2017** ஆகும்.

## 02. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை நிபந்தனைகள்

2.1 **1885/38**ம் இலக்க **2014.10.23**ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் 3ம் வகுப்பு – 1(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2.3 இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

2.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது **08 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல்** வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும்.

2.5 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

2.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம்

இப் பதவிக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆசிரியர் ஒருவர் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து **03/2016** ஆம் இலக்க **2016.02.25** ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, **GE 1-2016** சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் **ரூபா 27,740 – 6 x 300 – 7 x 380 – 2 x 445 – 33,090** மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தில், உப அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 14 ஆவது சம்பளப் படிநிலையான ரூபா **32,200/-** இல் அமர்த்தப்படுவர். எனினும் அவர்களுக்குரிய சம்பளம் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு **ரூபா 22,204/-** வழங்கப்படுவதுடன் சீராக்கற் படியாக ரூபா **6,444/-** வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளையும் அவர்கள் பெற உரித்துடையவராவர்.

## 04. பொதுத் தகைமைகள்

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். (*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

*04.3* விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

*04.4* விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

*04.5* விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **21 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள்

*05.1* இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய **04.08.2017ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத் தகைமைச் சான்றிதழைப் (**இணைப்பு - 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு**) பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள், கோரப்பட்ட கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.

**அத்துடன்**

*05.2* க.பொ.த(சா/த) பரீட்சையில் மொழியும் இலக்கியமும், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை

*06.1* எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது பிரயோகப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்ற வேண்டும் இதற்குப் புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தவறும் சான்றுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

*06.2* மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, **மாவட்ட அடிப்படையில்** எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நேர்முகத் தேர்வுக்காக தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டத்தில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து நேர்முகத் தேர்வுக்காக பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவார்கள்.

*06.3* வெற்றிடத்தின் 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 07. பரீட்சைக் கட்டணம்

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா ***500.00*** ஐ **வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர்** அவர்களின் ***"2003.02.13"*** என்ற பரீட்சைகள் வருமானக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## *08. விண்ணப்பிக்கும் முறை*

*08.1* இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **04.08.2017** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*08.2* விண்ணப்பப்படிவத்தில் 01 இன் கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது முழுப்பெயரின் இறுதியிலிருக்கும் பெயரை முதலில் எழுதி பெயரிலிருக்கும் அனைத்து பெயர் முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் குறிப்பிடவேண்டும்.

**உதாரணம்**:- விண்ணப்பப்படிவத்தின் 01 இல் SIVAKUMAR.K.S எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*08.3* அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**பட்டதாரிகளை ஆசிரியர் சேவை 3ம் வகுப்பு – 1(அ) தரப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2017(III)**" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*08.4* பட்டதாரிகள் தமது தகைமைகளுக்கு ஏற்ப **பொருத்தமான பாடங்களுக்கு** மாத்திரம் விண்ணப்பிக்கும் போது **அப் பாடங்களை குறிப்பிட்டு ஒரேயொரு விண்ணப்பப்படிவத்தை** மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். அப்பாடங்களுக்கமைவாகவே நியமனம் வழங்கப்படும். **ஆசிரியர் சேவைக்காக விண்ணப்பிக்கும் பாடம் / பாடங்கள்** பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*08.5* விண்ணப்பப்படிவத்தின் **நிழற்படப்பிரதியை** தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

*08.6* விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – ***021 221 9939***, தொலைநகல் இல - ***021 221 9940***)

**குறிப்பு :-**

கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## *09. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்*

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. பரீட்சைத் திட்டம்

### 11.1 எழுத்துப் பரீட்சை

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02 | பொது அறிவு | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக்கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினைப் பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத் தாள்களாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |

**குறிப்பு** :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதனால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

### 11.2 பிரயோகப் பரீட்சை

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01. நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02. ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03. தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04. நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05. சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தம்** | **25** | **10** |

## *12. பரீட்சைப் பெறுபேறுகள் :-*

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

## *13. பரீட்சை நிலையம் :-*

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| ***நகரம்*** | ***நகர எண்*** |
|---|---|
| யாழ்ப்பாணம் | ***01*** |
| வவுனியா | ***03*** |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

***14.*** இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

***சி.ஏ.மோகன்ராஸ்,***
*செயலாளர்,*
*மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,*
*வடக்கு மாகாணம்.*
*05.07.2017*

## வலயக்கல்வி அலுவலக மட்டத்தில் பாடரீதியான வெற்றிடவிபரம்

( “--” என்ற அடையாளம் வெற்றிடங்கள் இல்லை என்பதைக் குறிக்கும்)

| | தமிழ் | வரலாறு | குடியியல் | தகவல் தொழில்நுட்பம் | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | வழிகாட்டலும் ஆலோசணையும் | இரண்டாம் மொழி (சிங்களம்) |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | - | - | - | - | - | 4 |
| வலிகாமம் | 10 | 4 | 2 | 4 | 1 | 6 | 8 |
| வடமராட்சி | 1 | 3 | 3 | 2 | 3 | 3 | 6 |
| தென்மராட்சி | - | 5 | 3 | 2 | - | 3 | 5 |
| தீவகம் | 8 | 5 | 7 | 3 | 5 | 2 | 6 |
| கிளிநொச்சி | 12 | 6 | 6 | 4 | 11 | 8 | 8 |
| முல்லைத்தீவு | - | 4 | 3 | 2 | 8 | 7 | 4 |
| துணுக்காய் | 7 | 2 | 1 | 2 | 9 | 4 | 9 |
| வவுனியா வடக்கு | 4 | 4 | 5 | 2 | 5 | 2 | 8 |
| வவுனியா தெற்கு | - | 2 | 3 | 2 | 6 | 2 | 7 |
| மன்னார் | 11 | 2 | - | 2 | 8 | 8 | 8 |
| மடு | 8 | 3 | 6 | 2 | 1 | 2 | 5 |
| **மொத்தம்** | **61** | **40** | **39** | **27** | **57** | **47** | **78** |

**இணைப்பு – 02**

## பாட வகுதிகளும் அவற்றிற்கான அடிப்படைக் கல்வித் தகைமைகளும்

| பாட இலக்கம் | பாட வகுதி | தேவையான கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| I | தமிழ் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **தமிழ்** பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| II | வரலாறு | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில **வரலாறு** பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில **தொல்லியல்** பாடத்தை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| III | குடியியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில **அரசியல் விஞ்ஞான** பாடத்தைப் பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| IV | தகவல் தொழில்நுட்பம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள **தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம்** என்பவற்றுள் ஏதாவது ஒன்றை பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| V | விவசாயம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **விவசாய** பாடத்தை பிரதான பாடம் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட விஞ்ஞானமாணி பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானமாணி **(சூழலியல் விஞ்ஞானம்)** பட்டத்தினை நிறைவு செய்த பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| VI | இரண்டாம் மொழி சிங்களம் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **சிங்களப்** பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **மொழியியல் (Linguistics)** பாடத்தை கற்ற கலைமாணி (மொழியியல் சிறப்பு) பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |
| VII | வழிகாட்டலும் ஆலோசனையும் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **உளவியல்** பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **உளவியல்** பாடத்தினை ஒரு பாடமாகக் கொண்ட **சமூகப் பணி (Social Work)** பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் **சமூகவியல்** பாடத்தினை பிரதான பாடங்களில் ஒன்றாகக் / சிறப்புப் பாடம் ஒன்றாகக் கொண்ட கலைப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |

குறிப்பு :-

மேற்குறித்த **I தொடக்கம் VII வரையான பாடவகுதிகளுக்கு, முதலாம் வருடத்தில் அல்லது ஏதாவது ஒரு வருடத்தில்** மேலே தகைமைகளாகக் குறிப்பிடப்பட்ட ஒரு பாடத்தினைக் கற்றவர்கள் விண்ணப்பிக்க இயலாது.